நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில்
உன்னத் பாரத் அபியான திட்டக் கூட்டம்

இந்திய அரசின் உன்னத் பாரத் அபியான் திட்டம் நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டம் - நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வகுரம்பட்டி, மோகனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அணியாபுரம், பரளி, தோளூர் மற்றும் பேட்டப்பாளையம் ஆகிய கிராமங்கள் இத்திட்டத்தில் இக்கல்லூரியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் 04.01.2023 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கல்லூரி செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் தலைமை தாங்கினார். முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் முன்னிலை வகித்தார். இயக்குநர் உயர்கல்வி அரசுபரமேசுவரன் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் மேற்கண்ட கிராமங்களின் பொதுவான தகவல்களான மக்கள் தொகை, வார்டுகளின் எண்ணிக்கை, அரசு சுகாதார மையங்கள், கல்வி நிறுவனங்களின் விபரங்கள், கிராமங்களில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய, மாநில அரசுகளின் நலத்திட்டங்கள், மக்களின் வாழ்க்கை நிலை, உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் மேற்கண்ட கிராமங்களில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் நடைபெற்றது.

கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் எஸ். ஹேமலதா, தேர்நதெடுக்கப்பட்ட கிராமங்களின் பொறுப்பாளர்கள் ஆர். நவமணி, ஏ. லதா, ஜெ. பாரதி, எஸ். பிரியா, டி. பிரபா மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் என். எஸ். செந்தில்குமார், என். இளமதி, டி. கே. அனுராதா, ஆர். மலா்விழி, பி. லட்சுமி, எஸ். அனிதா, வீ. காயத்ரி ஆகியோா் கலந்து கொண்டனர்.

4.1.23

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.